# 2013-ஆம் வருடம் பெப்ரவரி மாதத்தில் நடத்தப்படும் L.S.S., மற்றும் U.S.S. தேர்வின் (L.S.S. & U.S.S. Examinations) PART - C-யுடன் சம்பந்தப்பட்ட பொதுக்குறிப்புகள்

**L.S.S., U.S.S. தேர்வுகள் சம்பந்தமான முக்கிய குறிப்புகளும் பொதுவிதிகளும் கீழே தரப்பட்டுள்ளன.**

1. **L.S.S. தேர்வு (L.S.S. Examination)**

சுற்றுச்சூழல்கல்வி, கணிதம், தாய்மொழி போன்ற விஷயங்களுடன் சம்பந்தப்பட்ட பிரிவுகளின் (Portfolio) வகைகளே மதிப்பிடப்படுகின்றன. பாடத்திட்ட ஏற்பாட்டின் படி, நாலாம் வகுப்பிற்கு நிச்சயிக்கப்பட்டுள்ள கற்றல் செயல்பாடுகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இனங்களில் இரண்டுவீதமுள்ள பிரிவுகளே (Portfolio), ஒவ்வொரு பாடவிஷயத்திற்கும் மதிப்பிடுவதற்காகக் கருதப்படுகின்றன. இவ்வினங்களில் எவையேனும் இரண்டு யூனிட்டுகளில் நடத்திய செயல்பாடுகளிலிருந்து மிகவும் சிறந்த இரண்டெண்ணங்களைத் தேர்ந்தெடுத்து சமர்ப்பிப்பதற்கான சுதந்திரம் மாணவருக்கு உண்டு. பிரிவு (Portfolio) களுடன், வகுப்பறைச் செயல்பாடுகளுக்குத் தெளிவாக, நோட்டுப்புத்தகங்களும் கொண்டுவரவேண்டும்.

ஒவ்வொரு பாடவிஷயத்திலும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரிவின்(Portfolio) வகைகளும், மதிப்பிடப்படவேண்டிய திறன்களும் கீழே தரப்பட்டுள்ளன.

| பாட விஷயம் | பிரிவின் (Portfolio) வகை | மதிப்பிடப்பட வேண்டிய திறன்கள் |
|---|---|---|
| மொழி | கவிதைகளின் ரசனைக் குறிப்பு | 1. கவிதைகளின் உட்பொருள், பொருளழகு, ஓசை நயம் ஆகியவற்றை உட்படுத்தி ரசனைக் குறிப்புத் தயாராக்கும் திறன்.<br>2. கவிதையின் உட்பொருள், வரிகள், சொற்களும் அவற்றின் பயன்பாடு ஆகியன பற்றிய தனது கருத்தை உட்படுத்தி ரசனைக்குறிப்புத் தயாரிக்கும் திறன்.<br>3. பிழையில்லாத மொழியில் எழுதும் திறன்.<br>(பார்க்க : Syllabus - Part - I, SCERT) |

| | | |
|---|---|---|
| சுற்றுச் சூழல் கல்வி | பரிசோதனைக் குறிப்புகள் | 1. பரிசோதனையை வடிவமைப்பதற்கான திறன்.<br>2. பரிசோதனை மூலம் சேகரித்த விவரங்களை ஆராய்ந்து தீர்மானங்கள் எடுக்கும் திறன்.<br>3. பரிசோதனையைப் படத்தினுதவியுடன் விளக்குதல், விவரங்கள், பட்டியல்/அட்டவணைகள் ஆகியவற்றை ஆராய்ந்து தீர்மானங்களை உட்படுத்தி அறிக்கை (Report) தயாரித்தல் ஆகிய திறன்கள். |
| கணிதம் | பட்டியல்/ அட்டவணை ஒப்பீட்டுக் குறிப்பு | 1. முக்கிய விவரங்களைப் பல்வேறு ஆதாரங்களிலிருந்து (Sources) சேகரித்து, வகைப்படுத்தி, வரிசைப் படுத்திப் பட்டியல்/அட்டவணை தயாரிக்கும் திறன்.<br>2. பட்டியல்/அட்டவணை விவரங்களை ஒப்பிட்டு ஆராய்ந்து சிறப்புத்தன்மைகளைக் கண்டுபிடித்து தீர்மானங்களை யுக்திபூர்வமாக வெளியிடும் திறன்.<br>**உதாரணம் - 1**<br>1. பொதுவிநியோக ஸ்தாபனங்களுடையவும், பிற ஸ்தாபனங்களுடையவும் விலைவிவரங்களைச் சேகரித்து அவற்றின் பட்டியல்/அட்டவணை தயாராக்கும் திறன்.<br>2. விலைவிவரங்களை ஒப்பிட்டு விலைவித்தியாசங்களைக் கண்டுபிடிக்கும் திறன்.<br>**உதாரணம் - 2**<br>1. பரம்பரையாக நடைமுறையிலுள்ள அளவு, நிறுத்தலளவு முறைகளை வகைப்படுத்திப்பட்டியல்/ அட்டவணை தயாரிக்கும் திறன்.<br>2. புதிய அளவு, நிறுத்தலளவு முறைகளுடன் ஒப்பிடும் திறன்.<br>(மேலே குறிப்பிட்ட இரண்டு உதாரணங்களிலும் தரப் பட்டதுபோல பட்டியல்/அட்டவணையும், ஒப்பிடுதலும் ஒரே காரியத்துடன் தொடர்புள்ளதாயிருக்க வேண்டும்.<br>பிற யூனிட்டுகளையும் கருதலாம். ஒப்பிடுதல் ஆராயும் திறன் தொடர்பைக்கண்டுபிடிக்கும் திறன் ஆகியயவை கருதப்படும்) |

**குறிப்பு:** தேர்வுக்கு வரும் ஒவ்வொருமாணவனும் 30 செ.மீ. நீளமுள்ள ஒரு ஸ்கேல் வைத்துக் கொள்ள வேண்டும்.

2. **U.S.S. தேர்வு (U.S.S. Examination)**

- கற்றல் செயல்பாடுகளால் உருவான கற்றல் தெளிவுகளையே, பிரிவில் (Portfolio) உட்படுத்தவேண்டும்.
- ஒவ்வொரு பாடவிஷயத்திலும், Portfolio வில் உட்படுத்த வேண்டிய வகைகள் கீழே தரப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| மொழி | ரசனைக்குறிப்புகள் (செய்யுள் நயம் உணர்தல் குறிப்புகள்) சிறு குறிப்புகள், டயரிக் குறிப்புகள் |
| சமூக அறிவியல் | அளவெடுப்பு (Survey) குறிப்புகள், எளிய செயல்திட்டங்கள், உற்று நோக்கல் குறிப்புகள், ஒப்படைப்புகள் (Assignments), சர்ச்சைக் குறிப்புகள். |
| அடிப்படை அறிவியல் | செயல்திட்டங்கள் (Projects), பரிசோதனைக் குறிப்புகள், உற்றுநோக்கல் குறிப்புகள், ஒப்படைப்புகள். |
| கணிதவியல் | கணிதவிளையாட்டுகள், உருவம் அமைக்கும் செயல்பாடுகள், கணிதவிடுகதைகள். |

- ஒவ்வொரு பாடவிஷயத்திற்கும் நேராகக் குறிப்பிடப்பட்டுள்ள இனங்களிலிருந்து மாணவன் தேர்ந்தெடுக்கும் செயல்பாட்டிற்குள்ள கற்றல் தெளிவுகளையே, அவ்வற்றின் பிரிவு (Portfolio) களில் உட்படுத்தவேண்டும்.

**பொதுவிதிகள்**

- மாணவன் ஏற்றெடுக்கும் கற்றல் செயல்பாடுகளில் சொந்தத் திறமையைக் காட்டுவதற்கும், பிரதிபலிப்பதற்கும் இயலும் கற்றல் தெளிவுகளைத் தேர்ந்தெடுப்பதற்கான சுதந்திரம் மாணவனுக்கு உண்டு.
- பாடவிஷயப்பிரிவு (Portfolio), தனி பைலாகவோ (File) கற்றல் செயல்பாடுகளின் பாகமாக நடத்திய செயல்பாடுகள் குறிப்பிடப்பட்ட நோட்டுபுத்தகமோ ஆகலாம். நோட்டுப்புத்தகமாயின், Portfolio வாகக் கருத்தப்படவேண்டிய இனங்களை, தனிக் குறிப்புகள் இணைத்துச் சமர்ப்பித்தால் போதும்.
- தனிப் ஃைபல்கள் (Files) கொண்டுவருவதாயின், வகுப்பறைச் செயல்பாடுகளின் தொடர்ச்சியை உணர்த்துவதற்கான தெளிவுகளும் கூடவே இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.